MAY 2025 **P/ID 35328/PTL4U**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 50 சொற்களில் விடை தருக.

1. விரவுப்பெயர் இயல்பாதலைக் குறிப்பிடுக.

2. 'குற்றியல் உகரத்துக்கு இன்னே சாரியை' - விளக்கம் தருக.

3. பனை + குறை, கா + குறை - புணர்க்க.

4. 'யாவென் வினாவும் ஆயியல் திரியாது' - பொருளுரைக்க.

5. 'ஓகார இறுதிக்கு ஒன்னே சாரியை' - ஏன்?

6. எல்லாம் என்னும் சொல் உயர்திணைப் பொருளில் நம் சாரியை பெறுமாற்றைக் கூறுக.

7. புளி மரக்கிளவி எச்சாரியை பெறும்?

8. ஆடூஉ, மகடூஉ - இன் சாரியை வருவதிலும் தவறில்லை ஏன்?

9. பீர் என்னும் கிளவி அம்மோடு பொருந்துமாற்றைக் குறிப்பிடுக.

10. தாயென் கிளவி இயற்கையாதல் எங்ஙனம்?

11. 'இருதிசை புணரின் ஏஇடை வரும்' - ஏன்?

12. மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகுமாற்றைக் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து முறையே 250 சொற்களில் விடை எழுதுக.

13. உயிரீறு, மெய்யீறுகளின் சிறப்புப் புணர்ச்சி குறித்து எழுதுக.

14. அழன், புழன் என்னும் சொற்கள் அத்து, இன் சாரியை பெறுவது குறித்து விளக்குக.

15. எல்லாரும், எல்லீரும் என்னும் சொற்கள் புணருமாற்றை எடுத்துரைக்க.

16. துனி முன் பதக்கு, நாழி முன் உரி என்ற சொற்களின் புணர்ச்சி விதியை விளம்புக.

17. எரு, செரு என்னும் சொற்கள் புணருமாற்றை விளக்குக.

18. தேன் என்னும் சொல்லின் புணர்ச்சி விதிகளைத் தருக.

19. ஒன்று, இரண்டு முன் ஆயிரம் புணருமாற்றைச் சான்றுடன் விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடை தருக.

20. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியை விளக்குக.

21. மெய்யீறுகள் வேற்றுமை ஏற்கும் போது பெறும் சாரியைகளை விளக்குக.

22. ஐகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளை விளக்குக.

23. ணகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளை ஆய்க.

24. குற்றியலுகரப் புணரியல் என்ற தனி இயல் தேவையா?- ஆய்க.

———————